மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. இரெ. இராசமாணிக்கம்: பேரவைத் தலைவரவர்களே, திருவண்ணாமலையின் பகுதியிலே இருக்கின்ற மக்களுடைய நியாய மான கோரிக்கையை உத்தேசித்து அங்கே ஒரு அரிசி ஆலை திறப்ப தற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருவண்ணாமலை கூட்டுறவு விற்பனை சங்கத்தினுடைய ஆதரவில் அரிசி ஆலை அமைக்கும் திட்டத்திற்கு அனுமதி கோரி கருத்துரு எதுவும் வரவில்லை என்றாலும்கூட கூட்டுறவுப் பதிவாளருக்கு அங்கே இருந்து வந்திருக்கின்றது. ஆனால், திருவண்ணாமலை கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் தனி அதிகாரிகள் ஒரு டன் கொள்ளளவு கொண்ட அரிசி ஆலைக்காக ரூ. 3 இலட்சம் செலவில் ஒரு டிக்கார் டிகேட்டர் அமைப்பதற் கான ஒரு கருத்துருவை கூட்டுறவுச் சங்கப் பதிவாளருக்கு அனுப்பி இருந்தார்கள். அதனைக் கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் அவர்கள் கீழ்க்கண்ட காரணங்களுக்காகத் திருப்பி அனுப்பி இருக்கிறார்கள். அது திருவண்ணாமலை கூட்டுறவுச் சங்கத்திலே இருந்து கூட்டுறவுப் பதிவாளருக்கு வந்திருக்கிறது. அதிலே குறைபாடுகள் இருந்த காரணத்தினால் அது திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறது. அந்தக் குறைபாடுகளை எல்லாம் நீக்கி விட்டு முறைப்படி இணை பதி வாளர், அங்கே இருக்கின்ற டி. ஆர். போன்றவர்களுடைய பரிந்துரையோடு அரசாங்கத்திற்கு அனுப்ப ஏற்பாடு செய்திருக் கிறோம். அது வந்த பிறகு அதை ஆய்ந்து, அதிலே இடம் இருந் தால் நிச்சயமாக அந்த முயற்சி எடுக்கப்படும் என்பதை மாண்பு மிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

விளவங்கோடு, கல்குளம் வட்ட சோதனை சாவடியில் பணியாளர்கள்.

* வினா 63 திரு. தே. ஞானசிகாமணி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) குமரி மாவட்டத்தில் விளவங்கோடு, கல்குளம் தாலுக்காக்களில் சோதனைச் சாவடிகள் நீக்கம் செய்யப்பட்டதன் காரணமாக வேலையிலிருந்து நீக்கம் செய்யப் பெற்ற 82 ரெவின்யூ இன்ஸ் பெக்டர்கள், 57 கடைநிலை ஊழியர்கள், 33 சுமை தூக்குவோர் ஆகியோருக்கு மாற்று வேலை வழங்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

1978 செப்டம்பர் 7]

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: (அ) & (ஆ) உணவுக் கொள்கை மாற்றம் காரணமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் 91 இளநிலை உதவியாளர்கள் (Special Revenue Inspectors), 57 கடைநிலை ஊழியர்கள், 33 சுமைத் தூக்குவோர் பதவி இழந்தனர். இவர்களில் பதவி இழந்த இளநிலை உதவியாளர்கள் அனைவரையும் பல்வேறு துறைகளில் உள்ள காலியிடங்களில் அமர்த்தி வருவாய் வாரியம் ஆணைகள் பிறப்பித்துள்ளது.

கடைநிலை ஊழியர்களில் 5-7-1978 தேதி வரை 30 பணியாளர்களுக்கு மாற்றுப் பணி மாவட்ட ஆட்சித் தலைவர் அளித்துள்ளார். அரசு ஆணைப்படி பணியிழந்த தற்காலிக அலுவலர்களின் பட்டியல் ஒன்று மாவட்ட ஆட்சித் தலைவரால் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன்படி பல்வேறு துறைகளில் காலியாகும் பதவிகளில் அந்தப் பட்டியலில் உள்ள பணியாளர்களை, வரிசைப்படி பணியிலமர்த்த மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை எடுத்து வருகிறார். இன்னும் மீதியுள்ள 27 கடைநிலை ஊழியர்களுள் (13 முறைப்படுத்தப்பட்ட பணியாளர், 14 தற்காலிக பணியாளர்கள்) பணியிடங்கள் காலியாகும்போதும் புதுப் பணியிடங்கள் அனுமதிக்கப்படும்போதும், பணியில் அமர்த்தப்படுவார்கள்.

33 சுமை தூக்குவோர் தற்காலிக ஊழியர்கள் ஆவார்கள். இவர்கள் வேலை வாய்ப்பு நிறுவனத்தின் மூலம் பணியில் அமர்த்தப்படவில்லை. மேலும் இவர்களில் ஐந்து பணியாளர்களைத் தவிர ஏனையோர், கல்வி மற்றும் வயது தகுதியில்லாதவர்கள், தகுதியுள்ள ஐந்து பேர்களும் வேலை வாய்ப்பு நிறுவனத்தில் பெயர் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுவார்கள்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு நுகர்பொருள் வழங்கு கழகத்தின் கீழ் உள்ள சோதனைக் கூடம்.

*வினு 64—திரு. கோ. இளங்கோவன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழ்நாடு நுகர் பொருள் வழங்கு கழகத்திற்காக Regional laboratory ஒன்று தஞ்சையில் இயங்கி வருகிறதா?

(ஆ) ஆம் எனில் அதன் நிர்வாகப் பொறுப்பு யாருக்கு அளிக்கப் பட்டிருக்கிறது?

(இ) நாளொன்றுக்கு சராசரி அப்பரிசோதனைக் கூடத்திற்கு எத்தனை samples வருகிறது?